# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 27.03.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ்வுடைய ஒரு பண்புப் பெயர் **சத்தார்** (குறைகளை மறைப்பவன்) என்பதாகும். இதற்கு அகராதியில் திரைக்குள் மறைவாக இருக்கக் கூடியது என்றும் அல்லாஹ்வுடைய பண்புகளுள் ஒன்று என்றும் தவறுகள் பலவீனங்களை மறைக்கும் இறைவன் என்றும் எழுதப்பட்டுள்ளது. மனிதனின் பலவீனங்களையும் தவறுகளையும் இறைவன் மறைப்பது மட்டுமின்றி அல்லாஹ் அவ்வாறு மற்றவரின் குறையைத் திரையிட்டு மறைப்பதை விரும்பவும் செய்கிறான்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:**

**இன்னல்லாஹ அஸ்ஸ வஜல்ல யுஹிப்புல் ஹயா வசதர்** - நிச்சயமாக அல்லாஹ் வெட்கத்தையும் திரையிடுதலையும் விரும்புகிறான்.

அல்லாஹ் எவ்வாறு தனது அடியார்களின் குறைகளை திரையிட்டு மறைக்கிறான் என்பது குறித்து ஒரு அறிவிப்பில் வருகிறது.

ஸஃப்வான் பின் முஅரித் அறிவிக்கின்றார். ஒரு மனிதன் ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்களிடம் கேட்டார். நீங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் குறைகளை மறைப்பது சம்பந்தமாக என்ன கேள்விப்பட்டீர்கள்? அப்போது அன்னார் கூறினார்கள். இறைவன் குறைகளை மறைப்பவரின் மீது கியாமத் நாளில் அர்ஷில் நிறுத்தி கூறுவான். நீ இந்த நாளில் இன்னின்ன பணிகளை செய்தாயல்லவா? அந்த நபர் ஆம் என்று கூறுவார். பிறகு இறைவன் இன்னின்ன காரியங்களும் செய்தாயல்லவா? அவரது குற்றங்களை தாமே ஒப்புக் கொள்ள வைத்து விட்டு அல்லாஹ் கூறுவான். உனது இந்த குற்றங்களை நான் உலகிலும் மறைத்தேன். இன்று கியாமத் நாளிலும் மறைக்கிறேன். நீ செய்த தவறுகளை நான் மன்னித்து விட்டேன்.

இவனே நமது அன்புமிக்க இறைவன். அடியாரின் குறைகளை மறைத்து அன்புடன் நடந்து கொள்பவன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்.

மற்ற மார்க்கங்களிலிருந்து அல்லாஹ்வின் திரையிட்டு மறைக்கும் பண்பு குறித்து எடுத்து வைக்கவே இல்லை. உதாரணமாக, கிறிஸ்தவ மதத்தில் திரையிட்டு மறைக்கும் இறைபண்பு எடுத்து வைக்கப்பட்டிருந்தால் அங்கு கஃப்பாரா என்ற பாவமீட்புக் கொள்கை இருந்திருக்காது. அதேபோன்று ஆரிய மதத்தின் மறு ஜென்மக் கொள்கை இருந்திருக்காது. வெவ்வேறு வடிவத்தில் மனிதன் தண்டனை பெறும் பொருட்டு உலகிற்கு அனுப்பபடுகிறான் என்று நம்புகின்றனர். இஸ்லாம் அல்லாஹ்வுடைய சத்தாரி என்ற திரையிட்டு மறைக்கும் பண்பை எடுத்து வைக்கிறது. இப்பண்பு இவ்வுலகிலும் வெளிப்படுகிறது. மறு உலகிலும் வெளிப்படுகிறது. இறைவன் இவ்வுலகிலும் குற்றங்களை மறைத்து விடுவான். மறு உலகிலும் மறைத்து விடுவான் என்பதை வைத்து மனிதன் என்ன வேண்டுமாயினும் செய்யலாம் என்று பொருளல்ல. தவறுகள் அழுக்குகளில் மூழ்கிக் கிடக்கலாம் என்று அர்த்தமல்ல. எப்படியாயினும் இறைவன் மன்னிக்கத்தான் போகிறான். தவறு செய்தால் என்ன ஆகிவிடப்போகிறது? நான் விரும்புவதை செய்து கொண்டு திரியலாம் எனக் கருதுவது தவறு.

ஒரு ஹதீஸில் வருகிறது. அல்லாஹ்வின் திரை எத்தகையது எனில் எண்ணற்றோர் அதற்கு வெளியிலும் இருக்கிறார்கள். ஏனெனில் ஒரு மூஃமின் பாவம் செய்யும்போது தொடர்ந்து ஒவ்வொன்றாக பாவம் அதிகரித்துக் கொண்டே செல்லும் போது மாற்றத்திற்கு எந்த வழியும் எஞ்சியில்லாத நிலையை அவன் அடைந்து விட்டால் இறைவன் மலக்குகளிடம் கூறுவான். எனது அடியானை மறைத்து வையுங்கள். மலக்குகள் தமது சிறகுகளால் அவனை மறைக்கின்றனர். ஆனால் இறைவனது இந்த நடைமுறையைக் கண்டும் தனது நடைமுறையை மாற்றிக் கொள்ள முயற்சி செய்யாதபோது இறைவன் எவ்வாறு நடந்து கொள்கிறான் என்பதைப் பற்றி நபிமொழியில் வருகிறது. அது ஒரு நீண்ட ஹதீஸ்.

மலக்குகள் அந்த அடியானை மறைக்க முயற்சி செய்யும்போது அந்த அடியான் தவ்பா செய்தால் அல்லாஹ் அம்மனிதனின் தவ்பாவை ஒப்புக்கொண்டு விடுகிறான். தனது பழைய திரையை எடுத்து விட்டு அதற்குப் பதில் ஒன்பது புதிய திரைகளைப் போட்டு அவனது குற்றங்களை மறைத்து விடுகிறான். அடியான் தவ்பா செய்யாமல் பாவத்தில் வளர்ச்சியடைந்து கொண்டே சென்றால் மலக்குகள் எவ்வாறு நாங்கள் இவனது தவறுகளை மூடுவது? மிக அதிகமாகி அவனது அசுத்தங்கள் எங்களையும் அசுத்தப்படுத்துகின்றனவே என்று கேட்பர். அப்போது மலக்குகளிடம், அவன் விருப்பப்படியே பாவங்களில் வீழ்ந்து கிடக்க விட்டு விடுங்கள் என்று இறைவன் கூறிவிடுவான். அதற்குப் பிறகு அடியான் நிலை எவ்வாறாகும் என்றும் வருகிறது. அவனது ஒவ்வொரு பலவீனங்களையும் அவன் இருட்டில் செய்த தவறுகளையும்கூட அல்லாஹ் வெளியில் கொண்டு வந்து விடுகின்றான். அல்லாஹ்வுடைய திரையிடும் பண்பு வேலை செய்யாது.

எனவே ஒவ்வொரு மூஃமினும் முயற்சி செய்து வர வேண்டும். அல்லாஹ் நம்மை தவ்பா செய்பவராக்க வேண்டும். எப்போதும் அவனது குறையை மறைக்கும் பண்பில் இருந்து பயன்பெறுபவராக்குவானாக.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்லூது (அலை) அவர்கள் இறைவனது திரையிட்டு மறைக்கும் பண்பை விளக்கி இவ்வாறு கூறுகின்றார்கள்.

உலகியல் தேர்வுகளில் ஒரு மனிதன் ஒன்றிரண்டு மதிப்பெண்கள் குறைந்து விட்டால் அதனை Fail ஆக்கி விடுகின்றனர். ஆனால் இறைவனது மாலிக்கி யவ்மித்தீன் என்ற பண்பு ரஹீமிய்யத்தின் காரணத்தால் மீண்டும் மீண்டும் கருணை காட்டி அவனை Pass ஆக்கி விடுகின்றது. அவனது குறைகளை மறைத்து விடுகின்றது. அவன் தவ்வாப் (தவ்பாவை ஏற்பவன்) –ம் ஆவான்.

இஸ்லாம் எடுத்து வைக்கின்ற இறைவன் மனிதனின் ஆயிரக்கணக்கான பாவங்களைப் பற்றி அறிந்திருந்தும் வெளிப்படுத்துவதில்லை. அவன் தனது அடியானின் பாவங்களை வெளிப்படுத்துவதில் வெட்கம் கொள்கிறான். ஹதீஸில் வருகிறது. அல்லாஹ் வெட்கப்படுகிறான். ஒரு வார்த்தையை கூறுவதற்கு, விளக்குவதற்கு வெட்கப்படுவதில்லை. மாறாக வெட்கக்கேடான விஷயத்திலிருந்து அடியானை காப்பாற்றுவதற்காக வெட்கம் கொள்கிறான். எனவே ஹதீஸில் வருகிறது. அவன் அடியானின் பாவங்களை வெளிப்படுத்துவதில்லை. ஆனால் ஒரு நேரம் வருகிறது. மனிதன் பாவத்திற்கு மேல் பாவம் செய்து அசுத்தமாகி விடுகிறான். இறைவனது திரையிட்டு மறைக்கும் பண்பில் இருந்து பயன்பெறுவதில்லை. மாறாக நாத்திக சிந்தனை ஓங்கி விடுகிறது. அப்போது அல்லாஹ்வுடைய ரோஷ உணர்வு அந்த அசுத்தமானவனை கைவிட்டுவிட விரும்புகிறது. எனவே அவன் இழிவடையச் செய்கிறான். எனவே, ரஹீமிய்யத் (மீண்டும் மீண்டும் கருணை காட்டும் பண்பு) –ன் ஒரு சிறப்புத்தன்மை திரையிட்டு மறைத்தலாகும். ஒரு செயல் மனிதனால் செய்யப்படும்போது அதில் ஏதும் குறைபாடு ஏற்பட்டால் அல்லாஹ் அதனை மறைத்து விடுகிறான். சில நேரங்களில் அம்மனிதனிடம் ரஹ்மானிய்யத் – அளவற்ற அருளாளன் என்ற பண்பை காட்டுகிறான்.

சுருக்கம் என்னவென்றால், ரஹீமிய்யத்தின் காரணத்தால் இறைவன் மன்னிக்கிறான். ரஹ்மானிய்யத்தின் காரணத்தால் அவன் செய்கின்ற நற்செயல்களுக்கு அதிலுள்ள குறைகளை பொருட்படுத்தாமல் கூலியும் தந்து விடுகிறான்.

தீமைகளைப் பற்றிய வெட்க உணர்வு மனிதனிடம் ஏற்பட்டு தவ்பாவின் பக்கம் கவனம் ஏற்படும் போது அல்லாஹ் அதனை மறைக்கிறான். எனவே அல்லாஹ் வெட்கம் திரையிட்டு மறைத்தலை விரும்புகிறான் என்பதற்கு மனிதன் பாவத்தில் வளர்ச்சி அடைந்து கொண்டே போகலாம் என்று ஒருபோதும் பொருளன்று. அவ்வாறு செய்கின்ற மனிதன் பிறகு சமுதாயத்தையும் கெடுத்து விடுகிறான். அல்லாஹ் மன்னித்து விடுவான். எனவே அமல் செய்ய தேவையில்லை என்று கருதிவிட சாத்தியமுண்டு. எனவே ஹதீஸில் அதனை தெளிவுபடுத்தியவாறு இவ்வாறு வருகிறது.

பிடிவாதமாக தொடர்ந்து பாவம் செய்பவர்களுக்காக அல்லாஹ் வெட்கம் கொள்வதில்லை. மாறாக அத்தகைய மனிதன் இருட்டில் செய்த குற்றத்தைக்கூட வெளியில் கொண்டு வந்து விடுகிறான்.

எனவே அல்லாஹ்வுடைய சத்தார் என்ற பண்பின் கீழ் தொடர்ந்து மனிதன் துஆ செய்து வர வேண்டும். என் இறைவா உனது திரையில் என்னை மறைத்து வைப்பாயாக. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இது சம்பந்தமாக கற்பித்த ஒரு துஆ அறிவிப்பில் வருகிறது.

ஹஸ்ரத் ஜுபைர் பின் முதம் அறிவிக்கிறார். நான் ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறக் கேட்டேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கீழ்க்கண்ட துஆவை ஒருபோதும் செய்யாமல் இருந்ததில்லை.

அல்லாஹ்வே! எனது நிர்வாணத்தை மறைப்பாயாக. எனது உறுதியின்மைகளுக்கு பாதுகாப்பு வழங்குவாயாக. அல்லாஹ்வே! எனக்கு முன்னாலும் பின்னாலும் வலமும் இடமும் எனது மேலிருந்தும் வரும் எல்லா ஆபத்துகளிலிருந்தும் உனது அடைக்கலத்தில் வருகிறேன். எனக்கு கீழிருந்து வரும் ஆபத்துகளிலிருந்தும் பாதுகாப்புத் தேடுகிறேன்.

இது அல்லாஹ்வுடைய மக்ஃபிரத் என்ற போர்வையின் கீழ் வருவதற்காக முழுமையான துஆவாகும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பாதுகாப்பதாக அல்லாஹ் ஏற்கனவே வாக்குறுதி அளித்திருந்தான். எல்லா வகையான பாவத்திலிருந்தும் மன்னிப்பு வழங்கி விட்டான். மேலும் எனது ஷய்த்தானும் முஸ்லிம் ஆகி விட்டான் என்று அன்னார் கூறினார்கள்.

இந்த மேற்கண்ட துஆக்கள் கூட யதார்த்தத்தில் நமக்கு கற்பிக்கப்பட்டதேயாகும். அல்லாஹ் இதன் ரூஹை புரிந்து கொண்டு இந்த துஆவை செய்து வருவதற்கு வாய்ப்பளிப்பானாக! அதன்படி அமல் செய்வதற்கும் தவ்ஃபீக் தருவானாக. இக்காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர் கற்பித்த துஆக்கள் பற்றி சில விஷயங்களைக் கூறுவேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

என் மீது பேருபகாரம் செய்த என் இறைவனே! நான் ஒரு கவனமற்ற அடியான். என் மீது இருளுக்கு மேல் இருளைக் கண்டாய்; அருளுக்கு மேல் அருள் செய்தாய். பாவத்திற்கு மேல் பாவத்தைக் கண்டாய்; கருணைக்கு மேல் கருணை காட்டினாய். எப்போதும் எனது குற்றங்களை நீ மறைத்து வந்தாய். எண்ணற்ற அருள்களை எனக்கு செய்தாய். இந்த தகுதியற்ற பாவம் நிறைந்தவனின் மீது கருணை காட்டுவாயாக! எனது அசுத்தங்களை மன்னிப்பாயாக. எனது கவலைகளில் இருந்து ஈடேற்றம் வழங்குவாயாக! உன்னைத் தவிர எனக்கு வேறு வழியில்லை; பாதுகாவலன் இல்லை! ஆமீன்!

இன்னொரு இடத்தில் ஒரு துஆ கற்றுத் தந்துள்ளார்கள்.

ரப்புல் ஆலமீனாகிய என் இறைவா! உனது உபகாரங்களுக்கு என்னால் நன்றி சொல்லி முடியாது. நீ மிக மிக ரஹீமும் கரீமும் ஆவாய். நான் அழிந்து போகமல் இருப்பதற்காக எனது பாவங்களை மன்னிப்பாயாக! எனது உள்ளத்தில் உனது களங்கமற்ற அன்பை இடுவாயாக! அதன் மூலமே எனக்கு வாழ்வு கிடைக்கும்.

எனது குற்றங்களை திரையிட்டு மறைப்பாயாக! நீ திருப்தி அடைகிற செயலை என்னை செய்ய வைப்பாயாக! நான் உனது கண்ணியத்திற்குரிய முகத்திடம் உனது கோபத்தை வெளிப்படுத்துவதிலிருந்து அடைக்கலம் வேண்டுகிறேன். இந்த உலகம் மற்றும் மறு உலக ஆபத்துகளிலிருந்து எம்மை காப்பாற்றுவாயாக! எல்லா அருள்களும் உனது கைகளிலேயே உள்ளன. ஆமீன் ஸும்ம ஆமீன்.

இந்த துஆ நமக்கு சிறப்பான துஆவாக இருக்க வேண்டும். அல்லாஹ்வின் அடைக்கலத்தில் இருந்தால் நமது பாவங்கள் தவறுகளை கவனித்து வருவோம். அதிலிருந்து விலக முயற்சி செய்து வருவோம்.

அல்லாஹ்வுடைய சத்தார் என்ற பண்பிலிருந்து பலன் பெறுவதற்கு அல்லாஹ்வுடைய அருளை ஈர்ப்பதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு மூஃமின் மீது என்ன பொறுப்புகளை போட்டுள்ளார்கள். இது குறித்து சில ஹதீஸ்களை எடுத்து வைக்கிறேன்.

ஒரு அறிவிப்பில் வருகிறது. **ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

ஒரு மூஃமினான பெண்ணின் கண்ணியத்தை எவர் பாதுகாப்பாரோ அல்லாஹ் அவரை நரக நெருப்பிலிருந்து பாதுகாப்பான். குறிப்பாக இந்த ஹதீஸைக் கூற தேர்ந்தெடுக்கக் காரணம் சில கணவன்-மனைவி ஒருவருக்கொருவர் தொடர்புகளில் விரிசல் ஏற்பட்டு விட்டால் உடனே ஒருவர் மற்றவரின் குறையைத் தேட ஆரம்பிக்கின்றனர். அவர்கள் மட்டுமல்லாமல் பையன் வீட்டார் பெண்ணின் மீதும், பெண் வீட்டார் பையன் மீதும் குறைகளைத் தேடி சில வேளைகளில் காரணமில்லாத அபாண்டங்களையும் கூறுகின்றார்கள்.

குறைகளை திரையிடுங்கள் என்று அல்லாஹ் கூறுகிறான். சிலவேளை பையனின் வீட்டார் நீதிமன்றங்களில் பெண்களின் மீது வைக்கும் குற்றச்சாட்டுகளைப் பார்க்கும்போது நமக்கு வெட்கம் ஏற்படுகிறது.

**ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

மூஃமினான பெண்ணின் கண்ணியத்தை திரையிட வேண்டும். அப்போதுதான் அல்லாஹ் நெருப்பிலிருந்து பாதுகாப்பான். ஏனெனில் சில வேளை கணவன் – மனைவி இருவரில் ஒருவரது உடல்நிலை காரணமாக அல்லது வேறு காரணமாக பிரிய வேண்டியது ஏற்பட்டால் அதற்காக அபாண்டமான விஷயங்களைக் கூறித்தான் பிரிய வேண்டும் என்பதல்ல. மாறாக, பழிசுமத்தாமல் கண்ணியமாகப் பிரிந்து விடலாம்.

ஓர் அஹ்மதி இதுபோன்ற காரியங்களிலிருந்து விலகியிருக்க வேண்டும். பெண்களின் கண்ணியத்தைப் பாதுகாப்பது ஓர் உதாரணமாக கூறப்பட்டுள்ளது. ஆனால் யாராக இருப்பினும் அவரது கண்ணியத்தை காப்பாற்ற வேண்டும். இன்னொரு ஹதீஸில் அதுபற்றி வருகிறது. அதில் பொதுவாக அனைவரின் கண்ணியமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்று வருகிறது.

அபூ ஸயீத் குத்ரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஒரு மூஃமின் தனது சகோதரரின் பலவீனத்தைப் பார்த்து அதனை திரையிட்டு மறைத்தால் அல்லாஹ் அவரை சொர்க்கத்தில் நுழையச் செய்வான். அதாவது பிறரின் குறைகளைத் தேடிய அலையக் கூடாது. மாறாக, மறைக்க வேண்டும். இதில் இரு தரப்பாருக்கும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. கூடவே நற்செய்தியும் சொல்லப்பட்டுள்ளது. நீங்கள் உங்கள் பிரச்சனைகளை தீர்க்க விரும்பினால் சரியான அனுமதிக்கப்பட்ட முறையில் தீருங்கள். ஒருவர் மற்றவர் மீது குற்றம் சாட்டி தீர்க்க வேண்டியதில்லை.

நீங்கள் அனுமதிக்கப்பட்ட முறையில் கண்ணியமான முறையில் பிரச்சனைகளைத் தீர்ப்பீர்கள் எனில் உறவுகள் நீடித்துக் நிற்கவும் செய்யலாம். நீங்கள் திரையிடும் போது உறவு முறிந்தாலும் குறைகளை மறைத்ததற்காக அல்லாஹ் சொர்க்கத்தை வழங்குவான்.

முதல் ஹதீஸில் தண்டனையிலிருந்து தப்பிக்குமாறு கூறப்பட்டது. திரையிடுவதனால் அல்லாஹ் நெருப்பில் இருந்து பாதுகாப்பான் என்று கூறப்பட்டது. இங்கு வருகிறது. அல்லாஹ் சொர்க்கத்தில் நுழையச் செய்வான். தண்டனையிலிருந்து காப்பாற்றுவது மட்டுமின்றி வெகுமதிகளும் வழங்குவான். இதுதான் அல்லாஹ் தருகின்ற முறையாகும்.

இன்னொரு ரிவாயத்தில் வருகிறது. அதில் இனனும் விளக்கமாக வருகிறது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் அறிவிக்கிறார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிம் சகோதரனுக்கு அநீதி இழைக்கமாட்டார். அவருக்கு உதவி தேவைப்படும் வேளையில் அவரை தனியாக விட்டு விட மாட்டார். எவர் தனது சகோதரரின் தேவையை கவனத்தில் கொள்வாரோ அவரது தேவைகளை அல்லாஹ் கவனிக்கின்றான். எவர் ஒரு முஸ்லிமின் கஷ்டத்தை அகற்றுவாரோ அல்லாஹ் கியாமத் நாளில் அவரது கஷ்டங்களை அகற்றுவான். ஒருவர் ஒரு முஸ்லிமின் குறைகளை மறைப்பாரோ அவரது குறைகளை கியாமத் நாளில் இறைவன் மறைப்பான். இதுவே உண்மையான முஸ்லிமிடம் இருக்க வேண்டிய தகுதியாகும். ஓர் அஹ்மதியிடமும் இருக்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)

அவர்களுடைய கையில் பைஅத் செய்த ஓர் அஹ்மதி இந்த எல்லா பாவங்களிலிருந்து விலகுவதாக வாக்குறுதி தருகிறார்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

ஒருவர் மற்றவருடன் சின்னஞ்சிறு சண்டையிட்டாலும் கூட ஒருவர் மற்றவரின் குறைகளை பகிரங்கப்படுத்துவதைப் பார்க்கிறோம். சின்னஞ்சிறு சண்டைக்காக தனது சகோதரரின் கண்ணியத்தின் மீது தாக்குதல் தொடுத்து விடுகிறார். தனது சகோதரருடன் சண்டையிடுகிறார். இது மிக மிக பொருத்தமற்ற செயலாகும். இது கூடாத செயல் ஆகும்.

ஒருவர் ஒரு தவறை செய்து விட்டு அதனை தமது தவற்றை ஒப்புக் கொண்டால் அவருக்கு என்ன ஆகிவிடப் போகிறது? சிலர் சின்ன சின்ன விஷயங்களிலும் எதிராளியை அவமானப்படுத்தாமல் பின்வாங்குவதில்லை. இதிலிருந்து விலகுவது அவசியமாகும். இறைவனது பெயர் சத்தார் ஆகும். பிறகு ஏன் அவர் தனது சகோதரரின் மீது கருணை காட்டுவதில்லை? கண்டும் காணாமை, மன்னித்து திரையிடுதல் ஆகிய சிறப்புப் பண்புகளை பயன்படுத்துவதில்லை?

தனது சகோதரரின் குறைகளை மறைக்க வேண்டும். அவரது கண்ணியத்தின் மீது தாக்குதல் தொடுக்கக் கூடாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்:

நான் ஒரு சிறு நூலில் படித்தேன். ஒரு மன்னர் குர்ஆனை எழுதிக் கொண்டிருந்தார். ஒரு முல்லா கூறினார். இந்த வசனத்தை தவறாக எழுதியுள்ளீர்கள். அரசர் முழு வசனத்தையும் அதை விட்டு அகற்றி விட்டார். பிறகு நான் இவ்வசனத்தை இவ்விடத்திலிருந்து பிறகு துண்டித்து எடுத்துக் கொள்கிறேன் எனக் கூறினார். அந்த முல்லா சென்றதும் அப்பகுதியை அரசர் துண்டித்து விட்டார். ஏன் அவ்வாறு செய்கிறீர்கள்? அந்த வார்த்தையை அகற்றுவதற்குப் பதில் அந்த இடத்தை துண்டிக்க வேண்டிய அவசியம் என்ன என்று அரசரிடம் கேட்கப்பட்டது. அப்போது அரசர் கூறினார். உண்மையில் முல்லா தான் தவறாக கூறுகிறார். நான் இதனை செய்வதால் முல்லாவின் தவறு வெளிப்படாமல் இருக்கும். மன்னருக்கு பெரும் அதிகாரம் இருந்தும் இவ்வாறு எளிமையைக் கைக்கொண்டார். சகிப்புத்தன்மையையும் விவேகத்தையும் கைக்கொண்டார். தவறான விஷயத்தை எவ்வளவு தைரியமாக என்னிடம் கூறினாய் என்று தண்டித்திருக்கலாம். அவரது தவறையும் மறைத்து மற்றவரின் முன் அவர் அவமானப்படுவதிலிருந்தும் அவரை காப்பாற்றினான். சரி நான் இதனை திருத்தி விடுகிறேன். இத்தகைய ஒரு எளிமை தேவை என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

அடுத்தவரின் தவறைப் பிடித்து அதனை பரப்புவது அகங்காரத்தின் வேரும் ஒரு நோயும் ஆகும். அத்தகைய செயல்களால் நஃப்ஸ் கெட்டு விடுகிறது. இதிலிருந்து விலக வேண்டும். சுருக்கமாக, இந்த விஷயங்கள் எல்லாம் தக்வாவைச் சார்ந்தவை. உட்புற வெளிப்புறமான எல்லா விஷயங்களிலும் தக்வாவை பயன்படுத்துபவர் மலக்குகளுடன் சேர்க்கப்படுகிறார். ஏனெனில் அத்தகையவரிடம் ஒரு பாவமும் எஞ்சியிருப்பதில்லை.

மலக்குகளின் பணி கீழ்ப்படிதல் ஆகும். தக்வாவினால் ஒருவர் மலக்குகளுடன் இணையும் தகுதி பெறுகிறார். சிறு பாவமும் அவரிடம் எஞ்சியிருப்பதில்லை. தக்வா கிடைத்து விட்டால் அதற்குப் பிறகு இறைவனது பரக்கத்துகள் கிடைக்கின்றன. முத்தகி உலகின் தொல்லைகளிலிருந்து காப்பாற்றப்படுகிறார். இன்று எண்ணற்ற துன்பங்கள் ஒவ்வொரு மனிதனின் மீதும் ஏற்படுகின்றன. பல சோதனைகள் வருகின்றன.

**எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

தக்வாவை கைக் கொள்ளுங்கள். துன்பங்களிலிருந்து காப்பாற்றப்படுவீர்கள். இறைவன் உங்கள் குறைகளை மறைக்கின்றான். எதுவரை இந்த நடைமுறையை கைக் கொள்ளவில்லையோ அதுவரை எந்தப் பயனும் இல்லை. அம்மக்கள் எனது பைஅத்தில் இருப்பதனால் எந்த பயனையும் அடைய இயலாது. பயன்

எவ்வாறு ஏற்படும்? ஓர் அநீதி உள்ளே இருந்து கொண்டே இருக்கும். குறைகளைத் திரையிட்டு மறைக்கவில்லை எனில் அது ஒரு அநீதியாகும். பிறகு நீங்கள் பைஅத் செய்தாலும், நன்மைகள் பல செய்தாலும் இந்த அநீதி உங்களிடம் இருந்து கொண்டே தான் இருக்கும். நன்மைகளால் எந்த பயனும் இருக்காது. அகங்காரம், பெருமை, காட்டுதல், முன்கோபம் போன்றவை மற்றவரிடம் இருப்பது போன்று உங்களிடமும் இருந்தால் மற்றவருக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம்? பெருமை, செயற்கையான நடிப்பு, முன்கோபம் இருந்தால் உங்களுக்கும் மற்றவர்களுக்கும் வித்தியாசம் இல்லை. நல்லியல்பு கொண்டவர் முழு சமுதாயத்திலும் ஒரே ஒருவர் இருப்பினும் மக்கள் அற்புதமான முறையில் அவரிடமிருந்து நல்விளைவைப் பெறுவர். நல்ல மனிதர் அல்லாஹ்வுக்குப் பயந்து நன்மை செய்கிறார். அவரிடம் இறைவனிடமிருந்து ஒரு கம்பீரம் தரப்படுகிறது. மக்கள் உள்ளங்களில் அவர் மீது ஒரு திகில் ஏற்படுகிறது. இவர் இறைவனுடைய நேசம் பெற்றவர்! என்ற பயம் உருவாகிறது.

இறைவன் புறமிருந்து வருபவருக்கு இறைவன் தனது மகத்துவத்திலிருந்து மகத்துவம் வழங்குகிறான் என்பது முற்றிலும் சரியான கூற்றாகும். அதுவே நல்லியல்பு கொண்டவரின் நிலையும் ஆகும். எனவே நினைவில் கொள்ளுங்கள். சின்னச்சின்ன விஷயத்திற்காக உங்கள் சகோதரருக்கு துக்கம் தருவது சரியன்று. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நல்லொழுக்கத்தில் முழுமை பெற்ற மனிதர் ஆவார்கள். அவர்களிடம் எல்லா நல்லொழுக்கங்களும் திரண்டிருந்தன. இப்போது அன்னாரின் கடைசி நல்லொழுக்கம் ஒன்றை நிலைநாட்டியுள்ளான். அதிலிருந்து பயன்பெறாதவர் மிகவும் பேரிழந்தவர்.

ஆகரீன்களின் மூலம் அல்லாஹ் மீண்டும் உலகில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நல்லொழுக்கத்தை நிலைநாட்டியுள்ளான். அதிலிருந்து பயன் பெறுங்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

மற்றவரின் பலவீனங்களை பரப்பாதீர்கள். சில நேரங்களில் மனிதன் மற்றவரின் பலவீனங்களை பரப்பும்போது அவனே அதில் மாட்டிக் கொள்கிறான். அதில் சிறிதுகூட உண்மையில்லை என்றால் பிறகு அவரது செயலுக்குரிய விளைவு வேறு இறைவனிடம் உள்ளது. பெரும்பாலானவர்கள் அசுத்தமான பழியை மற்றவர் மீது சுமத்தும் பழக்கம் கொண்டவர்ளாக இருக்கிறார்கள். சின்ன விஷயத்தை வைத்துக் கொண்டு பெரும் கதை கட்டி விடுகின்றனர். இதிலிருந்து விலகுங்கள். மனித குலத்திற்கு நன்மை செய்யுங்கள். தனது சகோதரருக்கு அனுதாபம் காட்டுங்கள். அண்டை அயலாருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள்.

முதலில் ஷிர்க்கிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். இது தக்வாவின் ஆரம்பப் பாடமாகும். எல்லா பாவங்களும் மறைவான ஷிர்க்கினால் உருவாகின்றன. அல்லாஹ்வின் மீது பயம் இருந்தால், அவனுக்கு நமது அனைத்து விஷயங்களும் தெரியும் என்று விளங்கியிருந்தால் இதுபோன்ற பணிகளை மனிதன் செய்யவே முடியாது. மனிதனை தீமையின் பக்கம் இட்டுச் செல்கின்ற வேலையைச் செய்ய இயலாது.

அல்லாஹ் ஒருவர் மற்றவரின் குறைகளை மறைத்தல், மறைக்காமல் இருத்தலின் கேடு பற்றி மிகவும் வலியுறுத்தியுள்ளான். திருக்குர்ஆனில் வருகிறது.

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அதிகமான யூகங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். ஏனெனில் சில யூகங்கள் பாவமாகும். பிறர் குற்றங்களைத் தேடி அலையாதீர்கள். உங்களுள் ஒருவருக்கொருவர் புறங்கூறாதீர்கள். உங்களுள் எவராவது மரணமடைந்து விட்ட தம் சகோதரரின் மாமிசத்தை உண்ண விரும்புவாரா? (உங்களைக் குறித்து இவ்வாறு கூறப்பட்டால்) நீங்கள் நிச்சயமாக அதனை வெறுப்பீர்கள். மேலும் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். அல்லாஹ் அதிகமாக கழிவிரக்கத்தை ஏற்றுக் கொள்பவனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான். (49:13)

இதில் **ழன்** என்று இறைவன் கூறுவது தப்பெண்ணம், தீய யூகம் ஆகும். உலகில் தீமை பரவுவதில் பெரும் பங்கு தப்பெண்ணத்தில் இருக்கிறது. தப்பெண்ணத்தின் காரணத்தால்தான் ஒருவர் மற்றவரின் பலவீனத்தை துருவித் தேடுகின்றார். அதன் மூலம் ஒருவரை கீழ்மைப்படுத்தி கெட்ட பெயர் ஏற்படுத்த விரும்புகிறார்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஒருவர் மற்றவரின் விஷயத்தில் பிறரின் குற்றங்களை தேடி அலையாதீர்கள். ஏனெனில் பிறர் குற்றங்களை தேடி அலைவது இறைவனுக்கு மிகவும் வெறுக்கத்தக்க செயலாகும். இந்த பிற குற்றங்களை தேடி அலையும் குணத்தின் விளைவாக மஜ்லிஸில் அமர்ந்து இருக்கும் போது புறம் பேசத் தொடங்குவர். இது ஒருவரின் பெயரைக் கெடுப்பதற்கு காரணமாக அமைகிறது. இது புறம் ஆகும். அல்லாஹ்வோ குறைகளை மறைப்பவன். எந்த விஷயத்தை அல்லாஹ் மறைத்து வைத்துள்ளானோ அதனை தேடி அலைந்து வெளிக்கொண்டு வந்து அதனைப் பற்றி புறம் பேசிக் கொண்டிருப்பது அல்லாஹ்வுக்கு மிகவும் பிடிக்காத காரியமாகும்.

எவ்விஷயத்தை அல்லாஹ் மறைத்து வைத்துள்ளானோ அதை திரை அகற்றிக் காட்ட எந்த மனிதனுக்கும் உரிமை இல்லை. எவர் மற்றவரின் குறையை மறைப்பதில்லையோ அவருக்கு நான் தண்டனை வழங்குவேன். ஏனெனில் திரையிட்டு மறைக்காமல் இருப்பது மற்றவருக்கு கெட்ட பெயர் ஏற்படுத்துவதற்கும் மற்றவரை நிர்வாணப்படுத்துவதற்கும் காரணமாகும். இதனால் சமுதாயத்தில் குழப்பம் ஏற்படும். ஒருவரது ரகசியத்தைப் பற்றி பேசத் தொடங்கினால் அதன் விளைவு கடும் சண்டையாகலாம். பகைமை வளரும். ஒருவருக்கொருவர் அன்பு நேசத்துடன் பழக வேண்டும் என்று இறை கட்டளை இருக்கும் போது அதன் முன்மாதிரியை நிலைநாட்டுங்கள். **ருஹ்மாவும் பைனஹும்** – அவர்கள் ஒருவருக்கொருவர் அன்புடன் நடந்து கொள்வர் என்ற காட்சியை நாம் காட்ட வேண்டும். ஒருவர் நமது ரகசியங்களை பரப்புகின்றார் என்று தெரியும்போது அவருக்கும் பரப்பியவருக்கும் இடையிலுள்ள உறவு முறிந்து விடுகிறது. இவ்வாறு திரை விலக்கிக் காட்டுவதால் எதிர் தரப்பு கோபம் கொண்டு சண்டைக்கு வருகிறது. அல்லது உள்ளத்தில் காயம் ஏற்படுத்தி விடுகிறார். எனது இந்த உறவினர் என்னைப் பற்றி இந்த நேரத்தில் இன்னின்ன வார்த்தைகள் பேசியுள்ளார் என்று தெரிய வரும்போது அதே வேளையில் அந்தப் புறம்கூறலைக் கேட்பவர் அவருக்கு இது தவறு என்று ஏன் புரிய வைக்கவில்லை? புரிய வைக்க இயலாத போது அல்லாஹ்விடம் இவர் சீர்திருந்துவதற்காக ஏன் துஆ செய்யக் கூடாது? ஆனால் விஷயத்தை பரப்புபவர் ஒன்று புறம் பேசிய பாவம் செய்கிறார். மேலும் திரையிட்டு மறைக்காத குற்றமும் அவர் மீது விழுகிறது. இரண்டாவது குழப்பத்தை ஏற்படுத்திய குற்றமும் செய்கிறார். குழப்பத்தைப் பற்றி இறைவன் கூறும்போது இது கொலையினும் கொடியது என்று கூறியுள்ளான். மேலும் இவ்வாறு புறம் கூறியவர் தீமையை பரப்பிய பாவம் செய்தவராகிறார். ஏனெனில், தீமை, பாவம் என்று கூறப்படுகின்ற விஷயங்கள், பலவீனமான ஈமான் கொண்டவர்கள் தடம் புரளவும் காரணமாகி விடுகிறது. சில இளைஞர்கள் அதனால் தடுமாறி விடலாம். இந்த மனிதர் கூட இதனைச் செய்துள்ளாரா? சரி நாமும் தான் அதனை செய்து பார்ப்போமே என்று நினைக்கிறார். இவ்வாறு தீமை வெளிப்படுகிறது.

நம்பிக்கை கொண்டவர்களுக்கிடையே தீய நடத்தை பரவிவிட வேண்டுமென விரும்புகிறவர்களுக்கு நிச்சயமாக இவ்வுலகிலும் மறுவுலகிலும் மிக்க வேதனையளிக்கக் கூடிய தண்டனை உண்டு. (24:20)

பாருங்கள். அல்லாஹ் வெட்கத்தையும் திரையிட்டு மறைப்பதை விரும்புபவனாகவும் இருக்கும் நிலையும் கூட, வெட்கக் கேட்டை பரப்ப விரும்புபவர், மூஃமின்கள் மீது களங்கம் சுமத்த விரும்புபவர் – மேலும் பேசிப்பேசி தீமைகளை பரப்பி விடுபவருக்கு உலகிலும் ஆகிரத்திலும் தண்டனை உண்டு.

ஏனெனில் சமூகத்தில் நடக்கின்ற தீமைகளைப் பற்றியே பேசுவதனால் ஒருவர் மற்றவரின் நிர்வாணத்தை வெளிக்காட்ட முயற்சிப்பதால் வெட்கம் போய் விடுகிறது. சமுதாயத்தில் சாதாரணமாக இந்த தீமைகள் பரவக் காரணம் இந்த வெட்கமின்மையே ஆகும்.

இன்றைக்கு மீடியாக்கள் முழு உலகிற்கும் தீமைகளைப் பரப்பி விடுகின்றன. அவ்வாறு பரப்புவதற்கு சுதந்திரம் என்று பெயர் கூறப்படுகிறது. இதனால் நிர்வாணம், வெட்கக்கேடு அடுத்தடுத்த தலைமுறைக்கும் மாறிக் கொண்டே செல்கிறது. மிகவும் ஆதங்கத்துடன் கூற வேண்டியுள்ளது. சில இடங்களில் சில அஹ்மதிகளும் கூட இத்தீமையை செய்கின்றனர். இஸ்லாம் திரை, வெட்கத்திற்கு மிகவும் அழுத்தம் தருகின்றது. மற்றவரின் குறைகளை தேடி அலையக் கூடாது என்றும் கூறுகிறது. அதனைப் பரப்பக் கூடாது.

ஒருவரின் பலவீனம் உங்கள் காதுக்கு வந்தால் அதனை துருவிக் கொண்டு அலையாமல் ஜமாஅத் அமைப்பிடம் கூறி விட்டு அமைதியாகி விடுங்கள். அவருக்காக துஆ செய்யுங்கள். பேசிப்பேசி அத்தீமையைப் பரப்ப முயற்சி செய்வீர்கள் எனில் தக்வாவை விட்டு வெளியேறி விடுவீர்கள். ஒருவரின் தீமையைப் பற்றி தற்செயலாக தெரிய வந்தால் ஒருவேளை அத்தீமையை செய்தவர் தவ்பாவும் செய்திருக்கலாம். அதனைப் பற்றி தெரிந்தவர் அத்தீமையைப் பரப்புகிறார் எனில் திரையை அகற்றும் தீமையை செய்த பாவமும், புறம்பேசி தனது இறந்த சகோதரரின் மாமிசம் தின்ற பாவமும் செய்கிறார். எனவே சமுதாயத்தை இந்த எல்லா தீமைகளிலிருந்தும் பாதுகாப்பதற்காக உங்களை நரக நெருப்பிலிருந்து காப்பாற்றுவதற்காக திரையிடுதல் மிக மிகத் தேவையாகும். நான் ஏற்கனவே கூறியது போன்று தவறு செய்தவர் திருந்த வேண்டும் என்பது உங்கள் நோக்கமாக இருப்பின் துஆவுடன் சம்பந்தப்பட்ட ஜமாஅத் பொறுப்பாளருக்கு தகவல் தெரிவித்தால் போதும். பாருங்கள். இந்த தீமை முடிகிற மாதிரி தெரியவில்லை என்று கூறி விடலாம். பிறகு விஷயத்தை முழுவதையும் இரகசியமாக வைத்து அம்மனிதர் சீர்திருந்த முயற்சி செய்யும் கடமை ஜமாஅத் பொறுப்பாளருடைய தாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எந்த சகோதரரின் பலவீனத்தைப் பார்த்தாலும் அவருக்காக துஆ செய்யுங்கள். துஆ செய்யாமல் அதனைப் பற்றி பேசுபவர் பாவம் செய்கிறார். அகற்ற முடியாத பலவீனம் என்ன இருக்கிறது? எனவே எப்போதும் துஆவின் மூலம் அடுத்த சகோதரருக்கு உதவி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் புறம் என்றால் என்ன என்று கேட்ட போது, அன்னார் கூறினார்கள்.

ஒருவரைப் பற்றிய உண்மையான விஷயத்தை அவர் இல்லாத நிலையில் எடுத்துச் சொல்வது – அம்மனிதர் அந்த இடத்தில் இருந்தால் தன்னைப் பற்றி அவ்வாறு கூறப்படுவதை விரும்பமாட்டார் எனில் அவ்விஷயத்தைப் பேசுவது புறம் ஆகும். குறை சொல்லப்பட்ட விஷயம் சம்பந்தப்பட்டவரிடம் இல்லையெனில் அதற்கு பெயர் அபாண்டப் பழி சுமத்தல் ஆகும்.

இறைவன் புறம் பேசுவதை சகோதரரின் மாமிசத்தை சாப்பிடுவதுடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளான்.

ஜமாஅத்தின் ஆரம்ப கட்டத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இத்தீமைகளைப் பற்றி விளக்கி விட்டார்கள். ஆனால் இப்போது 120 வருடம் கழிந்த பிறகு சில வேளை நபிமார்களை விட்டு காலம் அதிகமாகி விடும் போது அந்த தீமைகள் மீண்டும் மீண்டும் தலைகாட்டுகின்றன. ஜமாஅத் அல்லாஹ்வின் அருளால் வளர்ச்சி அடையும் இடங்களில் பல்வேறு வகை மக்கள் வருகின்றார்கள். சிலர் தமது தீமைகளை சரியாக சுத்தம் செய்ய இயலவில்லை. சில பழைய அஹ்மதிகள் சரியான முறையில் மார்க்கத்தை நிலை நாட்டாமல் தக்வாவின் ரூஹை புரிந்து கொள்ளாமல் இருந்து கொண்டு தீமைகளை பரப்பி விடுகின்றனர். எனவே இது ஆபத்தான கட்டமாகும். இதில் நாம் நம்மை சீர்திருத்த முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியதை கவனத்துடன் நினைவில் வைத்து அமல் செய்ய முயல வேண்டும். சில பலவீனங்களை உடையவர்கள் ஜமாஅத்தில் இருக்கின்றனர். சிலர் தகுதி பெற்றவர்களும் உள்ளனர். அத்தகையோர் பலவீனமானவர்களுக்கு மறைவாக அறிவுரை கூற வேண்டும். மனிதனுக்கு உண்மையான அனுதாபம் ஜமாஅத்தின் மீது இருக்கும் எனில், தனது சகோதரனின் பலவீனத்தைப் பார்த்தால் அதனை திரை விலக்கிக் காட்டுவதற்குப் பதிலாக அவரது பலவீனங்கள் குறித்து அவருக்கு மறைமுகமாக அனுதாபத்முதுடனும் நட்புடனும் புரிய வையுங்கள். அவர் ஏற்றுக் கொள்ளா விட்டால் அவருக்காக துஆ செய்யுங்கள். இந்த இரண்டு விஷயங்களில் இருந்தும் பயனடைய முடியாத போது இது இறை நியதி என்று புரிந்து கொள்ளுங்கள்.

ஒருவரின் பலவீனம் கண்டு கோபம் கொள்ள வேண்டாம். அவர் சீர்திருந்துவது முற்றிலும் சாத்தியமே ஆகும். எனவே இது குறித்து முன்னரே நான் கூறியுள்ளேன். இப்போது ஜமாஅத் அமைப்பும் Active ஆகி விட்டது. எனவே ஜமாஅத் அமைப்பு முற்றிலும் இரகசியமாக வைத்து செயல்பட வேண்டும். உலகத்திற்கு தெரியுமாறு வெளிப்படுத்த வேண்டாம். கூறினார்கள். பல திருடர்கள் விபச்சாரம் செய்பவர்கள் இறுதியில்

குதுபுகளாகவும் அஃப்தால்களாகவும் மாறி உள்ளனர். அவசரப்பட்டு எவர் மீதும் நம்பிக்கையிழப்பது நமது வழிமுறையன்று. ஒருவரின் குழந்தை கெட்டுப்போய் விட்டால் அதனை சீர்திருத்துவதற்காக மறைமுகமாக கடும் முயற்சி செய்கிறார். அதே போன்று தனது சகோதரருக்கும் செய்ய வேண்டும்.

பலவீனங்களைப் பார்த்து பரப்புமாறு திருக்குர்ஆன் ஒருபோதும் போதிக்கவில்லை. அடுத்தவரிடம் பேசிக் கொண்டு அலையுமாறு கூறவில்லை. மாறாக திருக்குர்ஆன் கூறுகிறது. **வதவாசவ்பிஸ் ஸப்ரி வதவா சவ்பில் மர்ஹமா** – அவர்கள் பொறுமை மற்றும் கருணையுடன் போதனை செய்கின்றனர். மர்ஹமா என்பது ஒருவரின் பலவீனம் கண்டு அவருக்கு அறிவுரை கூறி அவருக்காக துஆ செய்வதற்குப் பெயராகும். துஆவில் பெரும் விளைவு உள்ளது.

அந்த மனிதன் மிகவும் பரிதாபத்துக்குரியவன். ஒருவரின் பலவீனத்தை நூறு முறை மற்றவரிடம் கூறுகிறான். ஆனால் ஒருமுறை கூட அவன் துஆ செய்யவில்லை. ஒரு மனிதனுக்காக குறைந்தபட்சம் 40 நாட்கள் அழுதழுது துஆ செய்யாதவரை அவரது குறைகளை அடுத்தவரிடம் கூறக்கூடாது. **தகல்லகூ பி அகிலாகில்லாஹ்** – அல்லாஹ்வின் நல்லொழுக்கத்தை கைக்கொள்ளுங்கள் என்ற போதனையை நாம் நடைமுறைப்படுத்தத வேண்டும்.

பலவீனங்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று நான் கூறவில்லை. மாறாக புறம் கூறி பரப்ப வேண்டாம் என்றே கூறுகிறேன். ஏனெனில் அல்லாஹ்வின் வேதம் அதனை பாவம் என்று கூறியுள்ளது.

ஷேக் ஸஅதி தனது சீடருக்கு இறைஞானங்களை விளக்கிக் கொண்டிருந்தார். ஏற்கனவே அவருக்கு நிறைய அறிவுரை கூறியிருந்தார். இதனைப் பார்த்து மற்ற சீடர் இவர் தான் பெரிய அறிவாளி போலும் என்று கூறியது இந்த சீடருக்கு தெரிய வந்தது. சீடர் ஷேக் ஸஅதியிடம் இந்த சீடர் என்னைப் பற்றி இவ்வாறு கூறினார் என்று புகார் செய்தார். அப்போது ஷேக் ஸஅதி கூறினார். அம்மனிதர் உன் மீது பொறாமை என்னும் தீமையை செய்தான். நீ அவனைப் பற்றி புறம் கூறும் தீமையைச் செய்துள்ளீர்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மேலும் கூறுகின்றார்கள்.**

சுருக்கமாக, **ரஹ்ம்** – கருணை, துஆ, **சத்தாரி** – குறைகளை மறைத்தல், **மர்ஹமா** – ஒருவருக்கொருவர் கருணையுடன் அறிவுரை கூறுதல் இல்லாத வரை இந்த இயக்கம் இயங்க முடியாது. எனவே இந்தப் பண்புகள் நம்மிடம் வர வேண்டும். இப்போது ஜமாஅத் வளர்ந்து கொண்டிருக்கிறது. மிக அதிகமாக இதற்கு முயற்சி செய்ய வேண்டுமேயன்றி தகராறை வளர்ச்சியடைய விடக்கூடாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பல்வேறு இடங்களில் மீண்டும் மீண்டும் ஜமாஅத்திற்கு இது குறித்து நல்லுபதேசம் செய்துள்ளார்கள். குற்றங்களை திரையிடுதல் குறித்து வலியுறுத்தியுள்ளார்கள்.

அல்லாஹ் நமக்கு வாய்ப்பளிப்பானாக!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் போதனைகளின்படி அமல் செய்தவாறு இறைவனது சத்தாரி என்ற திரையிட்டு மறைக்கும் பணியில் இருந்து பங்கு பெறுபவராக இருப்போமாக! அல்லாஹ் நம்மீது அருள்புரிந்து எல்லா தீமைகளின் மீதும் நமது உள்ளத்தில் வெறுப்பை ஏற்படுத்துவானாக! எப்போதும் நன்மையின் பக்கம் அடியெடுத்து வைப்பவராக இருப்போமாக! ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தோன்றிய நோக்கத்தை நிறைவேற்றுபவராக இருப்போமாக! ஆமீன்.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 27.03.2009

Translated by : Muallim M. NIZAMUDEEN

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456